THE MADURA-RAMNAD DIOCESAN MAGAZINE

SATHIAVARTHAMANI

JULY, 1954

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

சத்தியவர்த்தமானி

ஜூலை, 1954

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

பத்திராதிபர் :— A. சாமுவேல் ஐயர், செமினரி, பசுமலை.

உதவி பத்திராதிபர்:—C. S. தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்.

மானேஜர் :—கனம் ஜார்ஷ்வா அவர்கள், மதுரை-ராமநாதபுரம்,
அத்தியட்சாதீன பொக்கிஷதார்,
211, தெற்கு மாரட் வீதி, மதுரை.

பத்திரிகைக் கமிற்றி :—

கனம் பிரடரிக் ஜேக்கப், மதுரை.

„ தேவப்பிரகாசம் ஐயர், திண்டுக்கல்.

„ தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்.

„ ஜார்ஷ்வா, அத்தியட்சாதீன பொக்கிஷதார்.

„ A. சாமுவேல் ஐயர், பசுமலை (தலைவர்.)

முக்கிய பொருளடக்கம்

1. அத்தியட்சரின் கடிதம்
2. திருச்சபைச் செய்திகள்
3. சிறுவர் பாகம்
4. பிரசங்கக் குறிப்புகள்
5. இயேசுவின் ஜெயப்பள்ளி
6. வருங்கால இந்திய சபை
7. கி.மு. சங்கப்பொருட்கள்
8. விளம்பரம்.

தென் இந்திய சபையைச் சேர்ந்த
மதுரை—இராமநாதபுரம் அத்தியட்சாதீனத்தின்

சத்திய வர்த்தமானி

புஸ்தகம் XV   பசுமலை, ஜூலை 1954   இலக்கம் 9

வருடசந்தா: 1 ரூ. தபாற்கூலி உட்பட.

அத்தியட்சரின் கடிதம்

தல்லாக்குளம், மதுரை,
ஜூன் 25, 1954.

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள மக்களே :—

ஜூன் 16, 17உ களில் சிவகாசியில் கனம் தாமஸ் ராக்லாண்டு ஐயரவர்களின் நூற்றாண்டு ஞாபகார்த்த விழா மிக மகிழ்ச்சியோடும் நன்றியறிதலோடும் கொண்டாடப்பட்டது. காலையில் கனம் ஜெபராஜ் அத்தியட்சரவர்களும் நானும் ஆராதனை நடத்தினோம். பிற்பகலில் ஏராளமானபேர் ஞானதீட்சை பெற்றனர். மாலையில் சாட்சிபகரும் பவனி சென்றது. சுமார் இரண்டாயிரம் பேர் பாடிக்கொண்டு ஊர்வலம் வந்தனர். நகரத்திற்கு இது ஓர் சாட்சியாய் விளங்கிற்று. கிறிஸ்துவையறியாத மக்களுக்குச் சுவிசேஷத்தையறிவிக்க வேண்டுமென்ற புத்துணர்ச்சி எங்களெல்லாருக்குமேற்பட்டது.

கடந்த 12 ஆண்டுகளாக சென்னை அத்தியட்சராகவும், தென்னிந்திய சபையின் முதல் மாடரேற்றராகவும் சிறந்த பணியாற்றிய கனம் ஹாலிஸ் அவர்கள் இவ்விரண்டு ஸ்தானங்களையும் ராஜினமா செய்திருக்கிறார். நமது சபை வாழ்வின் கஷ்டமான ஆரம்பக் காலங்களில் அவர்கள் காட்டிய ஞானம், தைரியம், பணிவு நிறைந்த சாட்சிக்காக சபை முழுவதும் நன்றி காட்டக் கடமைப்பட்டுள்ளது. விடுமுறைக்காக இங்கிலாந்து செல்கிறார். அடுத்த வருடம் பெங்களூர் வேதசாஸ்திரக் கல்லூரியின் பேராசியராகத் திரும்புவார். சென்னைக்கு ஓர் புதிய அத்தியட்சரைத் தேர்ந்தெடுக்கவேண்டும். ஓர் உண்மையுள்ள போதகரைக் கடவுள் அந்த அத்தியட்சாதீனத்திற்குக் கொடுக்கும்படி உங்களை ஜெபிக்க கேட்கிறேன்.

பாப்புவாவில் சேவை செய்ய இரண்டாவது மிஷனரிக் குடும்பம் ஒன்றை தென்னிந்திய சபை அனுப்பும் என்று கடந்த சஞ்சிகையில் எழுதியிருந்தேன். கனம் தியடோர் பால்மாணிக்கம் ஐயரவர்களும் அம்மாளும் அங்கு செல்வார்கள். இவர் கனம் கனேன் பால்மாணிக்கம் ஐயரவர்களின் புதல்வன். கனம் கனேன் திருமங்கலம் பாஸ்டரேட்டிலுள்ள சின்னக்கட்டளையில் பிறந்தவர் பாப்புவா தீவின் மக்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பதில் நமது சபைக்குக் கிடைத்த பங்கு ஓர் பெரிய சிலாக்கியமாகும். சபை அங்கத்தினர் ஒவ்வொருவரும் இதில் பங்குபெற ஆசிப்பார்களென நம்புகிறேன். இதற்காக இந்த ஆண்டில் நமது அத்தியட்சாதீனத்தின் பங்கு ரூ 1200 ஏற்கனவே அநேகர் இதற்காக நன்கொடை அனுப்பியிருக்கிறார்கள். கொஞ்ச நாட்களுக்கு முன் ஓர் சகோதரன் ரூ. 200/- கொடுத்தார். இந்த ஊழியத்திற்காகவும் ஊழியருக்காகவும் ஜெபிப்பதோடு தனி ஆட்களும் சபைகளும் தங்களாலியன்ற உதவிசெய்ய ஏவப்படுவார்களென நம்புகிறேன்.

தமிழ் வேதாகமங்கள் நமது புத்தக டிப்போவில் தற்போது விலைக்குக் கிடைக்கும். வேதாகமம் இல்லாத குடும்பங்கள் பாதி விலைக்கு வாங்கலாம். வேதாகமம் இல்லாத கிறிஸ்தவக் குடும்பங்கள் இருக்கக்கூடாது எல்லா வேதாகமங்களும் சீக்கிரம் விலையாகும் என நம்புகிறேன்.

ஆவியின் எழுப்புதலுக்காக் ஜெபிக்கவேண்டுமெனவும், எழுப்புதல் கூட்டங்களுக்காக ஏற்கனவே ஒழுங்குகள் செய்யவேண்டுமெனவும் முந்திய கடிதத்தில் எழுதியிருந்தேன். அநேக சபைகளில் சிறு சிறு ஜெபக்கூட்டத்தார் ஆவியின் எழுப்புதலுக்காக ஜெபித்து வருவதற்காக நன்றியறிதலுடையவனாயிருக்கிறேன். "இயேசுவின் ஜெபப்பள்ளி"ப் பிரதிகள் பசுமலை சாமுவேல் போதகரிடம் இலவசமாகக் கிடைக்கும் செப்டம்பர் மீ நடக்கும் ஆவிக்குரிய கூட்டங்களை உங்கள் ஜெபங்களில் நினைத்துக்கொள்ளுங்கள். கர்த்தருக்குச் சித்தமானால் எழுப்புதல் ஆரம்பிக்க இக்கூட்டங்கள் ஓர் நல்ல ஏதுவாகும் இதற்காக ஜெபியுங்கள். இதற்காக ஜெபிக்கும்படி சபைகளில் கூறுங்கள். கடவுள் அருளும் புதிய ஜீவியத்தை பசி தாகத்தோடு பெறும் நோக்கத்தோடு இக்கூட்டங்களுக்கு வரவுங்கள்

சிக்காக்கோ பட்டணத்தின் அருகாண்மையிலுள்ள எவென்ஸ்டனில் நடக்கும் திருச்சபையின் சர்வலோக இரண்டாவது மகாநாட்டிற்குப்போக இங்கிருந்து ஜூலைக் கடைசியில் புறப்படுவேன். போகிற வழியில் இங்கிலாந்தில் பிள்ளைகளோடு ஒருவாரம் செலவிடுவேன். மகாநாடு முடிந்தவுடன் தென்னிந்திய சபை அமெரிக்கன்

போர்டு சார்பாக பிரச்சார உபந்நியாசங்கள் செய்வேன். அக்டோபர் மீ ஆரம்பத்தில் இங்கு திரும்புவேன். இங்கிலாந்துவரை அம்மாள் என்னோடு வருவார்கள். சபைகள் பொது சாட்சியாய் உலகத்திற்கு விளங்க இம்மகாநாடு ஓர் நல்ல தருணமாகும். இது எளிதான காரியமல்ல, இம்மகாநாட்டின் மூலம் கடவுளின் வார்த்தை வெளிப்படும்படி தயவு செய்து ஜெபியுங்கள்.

கடவுள் உங்களோடிருப்பாராக.

கிறிஸ்துவுக்குள் உங்களன்புள்ள ஊழியன்,
லெஸ்லி நியூபிகின்,
அத்தியட்சர்.

அத்தியட்சரின் அலுவல்கள்.

ஜூலை	14—15	கொடைக்கானல்
	18	திடப்படுத்தல்—திண்டுக்கல்
	19—23	குருமாரின் வருடாந்திர ஒடுக்கக்கூட்டம்
	24	அமெரிக்கன் கல்லூரி கவுன்சில்
	25	ஸ்தோத்திர ஆராதனை—தல்லாக்குளம்
	26	அமெரிக்காவுக்குப் புறப்படுதல்

திருச்சபைச் செய்திகள்

1. சபையின் திருநாட்கள்.

ஆகஸ்டு	1	திரி. திரு. பின் ஞாயிறு	7
	6	மறுரூபத்திருநாள்	
	8	திரி. திரு பின் ஞாயிறு	8
	15	,,	9
	22	,,	10
	24	பரி பர்தொலோமேயு திருநாள்	
	29	திரி திரு பின் ஞாயிறு	11

2. "கிராமத் தொண்டன்."

ஜூன் மீ சஞ்சிகையில் இதன் மதிப்புரை கண்டிருக்கிறது. (பக்கம் 153). இது கிடைக்குமிடம் தற்போதுதான் கிடைத்தது. அது வருமாறு :— கனம் ஜே. சாம் பொன்னையா ஐயர், நாஹரி பேட்டை, சித்தூர் ஜில்லா.

3. செவல்பட்டியில் ஸ்தோத்திரப் பண்டிகை

நாளது வருஷம் மேமீ 30உ ஞாயிறன்று செவல்பட்டிக் கிறிஸ் தவர்களின் ஸ்தோத்திரப் பண்டிகை ஸ்தல குரு ஞானக்கண் தேவதாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் ஹார்வி பட்டி எக்ஸிகியூட்டிவ் ஆபீஸர் செல்லச்சாமி அவர்கள் உற்சாக மூட்டும் உபந்நியாசம் புரிந்தார் ஹார்விபட்டி கம்பௌண்டர் சௌந்தரராஜ் அவர்களும் ஆசிரியர் ஆபிரகாம் அவர்களும் ஆராதனை யில் பங்கெடுத்துக்கொண்டது திருச்சபையாருக்கு மிகுந்த எழுப்பு தலை உண்டாக்கிற்று. ஆலயம் திருச்சபையார்களால் நிறைந்து காணப்பட்டதும் தாங்கள் ஆண்டவனிடம் பெற்ற நல்ல ஈவுகளி விருந்துகாணிக்கைகள் படைத்த காட்சியும் இந்த ஆண்டிலேயே பாஸ்டரேட் கடனிலிருந்து விடுதலை பெற்று மகிழ்சியடையும் என்ற பூரண நம்பிக்கையை உண்டாக்கினது என்று காரியதரிசி கனம் சாமுவேல் ஆசிரியர் எழுதுகிறார்.

4. ஓர் நற்செய்தி

கிறிஸ்தவக் கம்பனெனவும் மகரிஷி எனவும் கீர்த்திமிகுந்த மகா வித்துவான் H. A. கிருஷ்ணபிள்ளை அவர்களைப்பற்றி கேட்டுக் களியாத் தமிழ்மக்களிலர். அவர்களது நூல் பலவும் பளிங்குபோற் பிரகாசித்து வருவதே தமிழ் நாடு கேட்டுக்களிக்கும்

(1) இரக்ஷணிய யாத்திரிகம்

இச்சிறந்த காவியத்தின் 3ம் பதிப்பு சென்னை C. L. S சங்கத் தாரால் அச்சடிக்கப்பட்டுவருகிறது சுமார் இன்னும் ஆறுமாதத் திற்குள் இப்பெருங்காப்பியம் வெளிவந்துலாவும்.

(2) இரக்ஷணிய சரிதம்.

நம பெருமானது வாழ்க்கையின் வனப்பை வர்ணிக்கும் செய் யுள் நூல் இதுவேயாகும். இதன் 2-ம் பதிப்பும் அடியேனுடைய உரையுடன் C.L.S. சங்கத்தாரது உதவியால் வெளிவந்துவிட்டது. இதன் விலை ரூ. 2-4-0

(3) இரக்ஷணிய மனோகரம்.

இது அருமையான தேவாரங்கள் அடங்கிய சிறந்த நூலெனப் பதை உலகு அறியும். இதன் மூன்றும் பதிப்பு வெளிவந்துள்ளது. இதன் விலை ரூ. 1-4-0 இதை அடியேனிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(4) இரக்ஷணியக் குறள்.

அடியேன் சுமார் 40 ஆண்டுகளுக்குமுன் பாளையங்கோட்டை சென்று வித்துவான் அவர்களது பந்துக்களுடன் பேசியும் அவர்க ளது புத்தகப் பண்ணையையும் ஆராய்ந்து பார்த்தேன். இந்நூலின் கைபபிரதி எனக்குக் கிடைக்கவில்லை "அகத்தியம்" என்னும் ஆதிப் பெருநூல அழிந்தவாறு இந்நூலும் மறைக்கப்பட்டுப் போனது மிக வருத்தம்.

(5) இரக்ஷணிய சமய நிர்ணயம்.

இது ஓர் சிறந்த வாசக நூல். வித்துவான் அவர்கள் தமிழைப் போலவே வடமொழி மலையாள பாஷைகளையும் நன்கு அறிந்துள்ளமையால் ஆதி வேதங்களையும், காவியங்களையும் புராணங்களையும் ஆராய்ந்ததின் பயனுய் தெய்வ இலட்சணங்கள் அனைத்தும் இயேசு கிறிஸ்து பெருமானிடமே விளங்கினபடியால் அவரே உண்மையும் பூரணமுமான அவதார புருஷன் என்பதை ஆதாரங்களுடனும வடமொழிச் சுலோகங்களுடனும் விளக்கிக்காட்டும் நூல் இதுவேயாம். இதன் முதல் பதிப்பு வித்துவான் அவர்கள் காலத்தில் வெளிவந்துள்ளது. அப்புத்தகம் இப்பொழுது கிடைப்பது அரிதாகியுள்ளது, இந்நூலின் அருமையை அறிந்த ஒரு தமிழ்க் கிறிஸ்தவப் பெரியார் இப்பெரிய நூல் முழுவதையும தன் சொந்தச் செலவிலேயே வெளிப்படுத்துவதாக எனக்குத் தெரிவித்துள்ளார். ஆ! என்ன சந்தோஷம், தமிழ்க் கிறிஸ்தவ உலகின் மனமுவந்த நன்றி இப்பெரியாருக்கு உரிமையாகின்றது. அடியேன் இன்னும் இரண்டு மாதங்களுள் இலங்கையை விட்டு இந்தியா திரும்பினதும் இந்நூல் அச்சுவாகனம் ஏறி சுமார் இரண்டு மாதங்களில் வெளிவந்துலாவும். இவைகளைக் கேட்க தமிழ் மக்களினுளம பூரிக்குமல்லவா?

கடம்பவனம்.

யாழ்ப்பாணம்
5-5-54

---

5. பாப்புவா மிஷனுக்கு நன்கொடை.

இந்த சிறந்த சேவைக்காக ஒரு சிநேகிதர் ரூ. 200 (இருநூறு) நன்கொடை அனுப்பியிருக்கிறார் என்பதை நன்றியறிதலோடு தெரிவிக்கிறேன என்பதாய் கனம் அத்தியட்சரவர்கள் எழுதுகிறார்கள்.

6. கிராம முன்னேற்றப் பயிற்சி.

நமது அத்தியட்சாதீனத்திலிருந்து ஏழுபேர் மார்த்தாண்டத்திற்கு ஒருமாதக் குறுகிய கால பயிற்சிக்காக அனுப்பப்பட்டார்கள். அவர்களுக்கு கோழி வளர்த்தல், தேனீ வளர்த்தல், சோப் செய்தல், பழரசம் தயாரித்தல், மீன் வளர்த்தல், ஆடு வளர்த்தல் முதலிய பாடங்களில் பயிற்சிகொடுக்கப்பட்டது. மத்திய, வடக்கு, தெற்கு, மேற்கு, இராமநாதபுரம் கவுன்சிலிலிருந்து பிரதிநிதிகள் இப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டார்கள். மேற்கூறிய தொழில்களை திறம்பட நடத்துதற்கு வேண்டிய உதவி கொடுக்கப்படும். ஆகையால் உங்கள் தேவைகளை கவுன்சில் சேர்மன் மூலமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள் என்று அத்தியட்சாதீனக் கிராம ஊழியர் கனம் செல்லப்பா எழுதுகிறார்.

சிறுவர் பாகம்—பிரசங்கக் குறிப்புகள்

(கனம் தவமணி ஐயர், மண்டபம் கேம்பு)

1. ஜெபத்தின் அழகான படம்

பல ஆண்டுகளுக்கு முன், இரு சினேகிதர் சித்திரம் எழுதி ஜீவனம் செய்து வந்தனர். சித்திரம் எழுதுவதில் அதிகப் பயிற்சியும் தேர்ச்சியுமடையும் நோக்கமாக பாரீஸ் நகர் சென்றனர். படிப்பின் செலவு அதிகமாயிருந்ததால், ஏகசமயத்தில் இருவரும் பயிற்சிபெற அவர்களிடம் போதிய பணமில்லை. எனவே ஒருவர் படிக்கவும், மற்றவர் இருபேருடைய பிழைப்புக்காக உழைக்கவும் ஏற்பாடு செய்துகொண்டனர்.

சிறிது காலஞ்சென்றபின், அவ்விடத்தில் சித்திரப்போட்டி ஒன்று நடந்தது. அநேக சித்திரக்காரர் அதில் கலந்துகொண்டனர். சித்திரப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த சினேகிதனும் அதில் கலந்து கொள்ள விரும்பி பல சித்திரங்களை வரைய எத்தனித்தார். ஒன்றும் உசிதமாகத் தோன்றவில்லை ஒருநாள் மாலை மயங்கும் நேரத்தில். மிகுந்த மனச்சோர்வோடும், கலக்கத்தோடும் தன் விடுதிக்கு வந்தார் அச்சமயம் பகல் முழுதும் கஷ்டப்பட்டு வேலைசெய்து விடுதிக்குத் திரும்பியிருந்த தன் சினேகிதன், ஓர் அறையில் தன் கரங்களைக் கூப்பிய வண்ணம் ஜெபித்துக்கொண்டிருந்த காட்சி அவருடைய கண்களைக கவர்ந்தது. எதை வரைவது என்று தீர்மானிக்க முடியாமலிருந்த அவர் மனதுக்கு "ஜெபிக்கும் கரங்களே" உயர்ந்தோர் அழகிய சித்திரமெனப் புலப்பட்டது எனவே, அதைக்கவனத்தோடு வரைந்து அனுப்பினர். போட்டியை ஒழுங்கு செய்தவர்களின் பார்வையில "ஜெபிக்குங் கரங்களே" சிறப்பான படம் எனத் தீர்மானிக்கப்பட்டு பரிசும் பெற்றது.

ஆண்டவருடைய பார்வையில் அருமையான, அழகான படம் எது? "ஜெபிக்கும் கரங்கள்' எழுந்திரு, இராத்திரியிலே முதற் சாமத்தில் கூப்பிடு .....உன்கைகளை அவரிடத்திற்கு ஏறெடு; (புலம் 2 19; நீ பாவப் பாரஞ் சுமந்து தவிக்கிற பாவியானுலுஞ்சரி. அற்ப விசுவாசியானுலுஞ்சரி, உன் கரங்கள் ஜெபிக்கும் கரங்களாயிருந்தால், உனக்கு ஜெயம் உண்டு

"நம்முடைய கைகளோடுங்கூட, நம்முடைய இருதயத்தையும் பரலோகத்திலிருக்கிற தேவனிடத்திற்கு ஏறெடுக்கக்கடவோம்" (புலம். 3:11) அப்பொழுது நிச்சயமாகவே நாம் ஜெயம் பெறுவோம்.

2. ஜெபமே துணை

ஓர் பக்தியுள்ள அம்மாள் இருந்தார்கள். அந்த அம்மாள் ஒவ்வொரு காரியத்தையும் ஆண்டவரிடம் சொல்லாமல் செய்கிறதேயில்லை. ஜெபத்தின் மூலமாயே அவர்கள் குடும்பம் ஆதரிக்கப்பட்டு வந்தது. ஒருநாள் 5 ரூபாய் அந்த அம்மாளுக்கு அவசியமாயிருந்தது. முந்தினநாளில் இரவெல்

லாம் ஆண்டவரோடு போராடினார்கள். எப்படிக் கிடைக்குமென்று மனதிலே சந்தேகம் சில சமயங்களில் தோன்றினாலும் ஆண்டவரிடம் சொல்லியாயிற்று; எப்படியாகிலும் கிடைக்குமென்ற நம்பிக்கையும் இருந்தது. யார் மூலமாய் இந்த உதவியை தேவன் செய்வாரோ எப்படி இந்த இரவுக்குள் இதைப் பெற்றுக் கொள்வோமோ என்று மனதிலே பலவாறாக சிந்தனை செய்து, விதவைகளையும் திக்கற்ற பிள்ளைகளையும் விசாரிக்கிறவர் தன்னையும் விசாரிப்பார்; சமயோசிதமான உதவிசெய்வார் என்று நம்பினார்கள். அன்று, அவர்கள் தன் வேலையை முடித்து வீட்டிற்கு திரும்புகிற வழியில் சூரியன் அஸ்தமனமாகிவிட்டது. இன்னும் உத்தரவு வரவில்லையே என்று சந்தேகம். மனதில் ஆண்டவரைநோக்கி இன்னும் கொஞ்சநேரம் மாத்திரம் இருக்கிறது. என்எஜமானே! என் அவசரம் உமக்குத் தெரியாததல்ல; எப்படியாகிலும் எனக்கு இந்தப் பெரிய உதவி செய்யவேண்டுமென்று கெஞ்சினார்கள். வீட்டிற்கு வருகிற வழியில் காற்றுஅகோரமாய்வீச இருட்டுமதிகமாகிவிட்டது. வீடுவந்து சேர சற்றுத்தூரத்தில் காற்றினால் ஒரு தாள் பறந்து காலில் வந்து விழவே அதைக்குனிந்து எடுக்கும்படியாக மனதில் ஒரு எண்ணமுண்டானது உடனே அதை எடுத்துக்கொண்டார்கள் இருட்டானதினால் அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறதென்று தெரியவில்லை. வீட்டில் வந்து விளக்கில் அதைப் பார்க்கும்போது கர்த்தர் அவர்களுக்காக ஆயத்தப்படுத்தின 5 ரூபாய் நோட்டு. ஆ என்ன ஆச்சரியம்! தன் பிள்ளைகளையெல்லாம் கூப்பிட்டார்கள். நடந்த காரியத்தை விவரித்து "மெய்யாய் தேவன் எனக்குச் செவி கொடுத்தார், என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார்" (66.19) என்று சொன்னார்கள். எல்லாரும் சேர்ந்து ஆண்டவரை ஸ்தோத்தரித்தார்கள்.

எப்பொழுது ஜெபிக்க?

தாவீதைப் போல் அதிகாலையிலும்
தானியேலைப் போல் மத்தியானத்திலும்
சீலாவைப் போல் நடு இரவிலும்
அன்னாளைப் போல் துக்கத்தின் மத்தியிலும்
யோபைப்போல் துன்பத்திலும் (வியாதியிலும்)
எலியேசரைப்போல் ஒரு காரியத்தைத் துவக்கும் பொழுதும்
சாலமோனைப் போல் எடுத்தகாரியத்தை முடிக்கும் பொழுதும்
சாமுவேலைப் போல பாலியத்திலும்
தீமோத்தேயுவைப் போல் வாலிபத்திலும்
பவுலைப் போல் நடுப் பிராயத்திலும்
சிமியோனைப் போல் வயோதிகத்திலும்
ஸ்தேவானைப் போல் மரணவேளையிலும்
கிறிஸ்துவைப் போல் எல்லா சமயங்களிலும் —ஜெபி

இயேசுவின் ஜெபப்பள்ளி.

ஒன்பதாம் பாடம்.

'அறுப்புக்கு எஜமானை வேண்டிக் கொள்ளுங்கள்'.

அல்லது

ஜெபம் வேலை ஆட்களைத் தருகிறது.

தம்முடைய சீஷர்களை நோக்கி; அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம். ஆதலால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக் கொள்ளுங்கள் என்றார்.'
(மத் 9.37-38.)

ஆண்டவர் அடிக்கடி அவரது அடியாருக்கு எப்படி ஜெபிக்க வேண்டுமென்று கற்பித்தார். ஆனால் எதைப்பற்றி ஜெபிக்கவேண்டுமென்று அபூர்வமாகவே கற்பித்தார். எதைப்பற்றி ஜெபிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க அடியாருடைய தேவை உணர்ச்சிக்கும் பரிசுத்தாவியின் நடத்தலுக்கும் விட்டு விட்டார். ஆனால் இங்கே அடியார் ஒரு விஷயத்தை மனதில் வைக்க வேண்டுமென்று வெகு தெளிவாய்க்கூறுகிறார். அறுப்பு மிகுதியாயிருப்பதால், அறுப்புக்கு ஆட்களை அனுப்பும்படி அமலனிடம் மன்றாடவேண்டும் என்கிறார். 'நள்ளிரவு நண்பன்' உவமையில் போலவே ஜெபம் தன்னலமற்றதாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறார். இங்கே வல்லமையின் வாயிலாகவே ஆசீர்வாதம் பிறருக்கு வரும். பரமபிதாவே அறுப்பின் எஜமான். பரிசுத்தாவிக்காக நாம் ஜெபிக்கும் போது, தெய்வத்திருப்பணிக்கு ஆட்களை ஆயத்தம் செய்து அனுப்புமாறு வேண்டுதல் செய்யவேண்டும்.

இது விஷயமாய்ச்சீடர்களை ஆண்டவர் ஜெபிக்கும்படி கேட்பது விந்தையன்றோ? அவர் தாமே ஜெபிக்கலாகாதா? அடியாரின் ஆயிரம ஜெபங்களைவிட அவரது ஒரே ஜெபம் போதாதா? அறுப்புக்கு எஜமானுகிய அமலன் அதன் தேவையை அறியாரா? அவர்கள் ஜெபமல்லாமலே ஏற்றகாலத்தில் கடவுள் வேலையாட்களை அனுப்பமாட்டாரா? இத்தகைய கேள்விகள் ஜெபத்தின் ஆழ்ந்த இரகசியங்களுக்கும், கடவுட் பேரரசில் அதன் வல்லமைக்கும், நம்மை வழி நடத்துகின்றன. ஜெபம் ஒரு சக்தி. அறுப்பும், கடவுட் பேரரசின் வருகையும் அச்சக்தியினையே பொருத்திருக்கிறது.

ஜெபம் ஒரு சடங்கன்று; வெளியாச்சாரமுமன்று; வெளிவேடமும் அன்று. ஆண்டவராகிய இயேசுவே சத்தியம். அவர் திரளான ஜனங்களைக் கண்டபோது அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடு

களைப்போல தொய்ந்து போனவர்களும், சிதறப்பட்டவர்களுமாக இருந்தபடியால் அவர்கள்மேல் மனதுருகி, (மத். 9:36) அவர்கள் மத்தியில், வேலையாட்களை அனுப்புமாறு கடவுளிடம் வேண்டிக்கொள்ளும்படி தூண்டினார். அவர்கள் ஜெபம் அவசியம் என்றும், அதனால் பயன் கிட்டும் என்றும் ஆண்டவர் நம்பினதினாலேயே அவ்வாறு கேட்டுக் கொண்டார். நமது ஊனக்கண்களுக்குப் புலப்படாதபடி மறைந்துள்ள சூக்ஷ்ம உலகம் இயேசுவின் புனித மனித ஆத்துமாவின் ஞானக்கண்களுக்குப் புலப்பட்டது. ஆத்தும உலகில் மறைந்துள்ள காரண காரியத்தொடர்பினை நன்கறிந்திருந்தார். ஆபிரகாம், மோசே, யோசுவா, சாமுவேல், தானியேல் முதலிய அடியார்களைக் கடவுள் அழைத்தபோது, அவரது நாமத்தின் பேரில் மக்கள்மீது அவர்கட்கதிகாரத்தைக் கொடுத்ததோடு, அவ்வடியாரின் தேவைகளில் வானுலக வல்லமைகளை, தமது உதவிக்கு வருமாறு அழைக்கக் கூடிய அதிகாரத்தையும், உரிமையையும் அருளினார் என்பதைக் கடவுளின் அருள் வேதத்தில் பொன்னெழுத்தால் பொறிக்கப்பட்டிருப்பதையும் ஆண்டவர் அறிந்திருந்தார். மேலும் பண்டையப் பக்தர்கட்கும், அவருக்கும், உலகில் ஒவ்வொரு காலங்களில் கடவுள் திருப்பணி நம்பி ஒப்படைக்கப்பட்டிருந்தது போலவே, தமது அடியாராகிய சீடர் கரங்களிலும் அப்பணியை ஒப்படைத்தல் அவசியம் என்பதையும் அறிந்திருந்தார். அப்பணியின் வெற்றியும தோல்வியும் அன்னவர் விசுவாசத்தையே பொருத்திருக்கும் என்பதையும் அவர் அறிவார். ஒரு தனியாளாக குறைபாடுகள் நிறைந்த மனித உடலுடன் கூடிய அவரது மனித வாழ்க்கையில், இத்தனை திரளான ஜனங்களைப்பற்றிக் கவனிப்பது அசாத்தியம என்றும், ஆகவே அடியாரின் உதவி அவருக்குத் தேவை என்றும் ஆண்டவர் கருதுகிறார். ஆகையினால் தான் சீடர்கள் அப்பணியை இப்போதே தொடங்கி, ஜெபிக்கவேண்டு மென்றும், உலகில் அவர் திருக்கரத்திலிருந்து அப்பணியின் பொறுப்பைத் தமது தோள்களில் ஏற்றுக் கொண்டபின், இவ்விண்ணப்பம் அவர்களது ஜெபங்களில் பிரதான இடம் பெறவேண்டு மென்று விரும்புகிறார். அறுப்புக்கு, அறுப்புக்கு எஜமான் தாமே வேலையாட்களை அனுப்புமாறு வேண்டிக்கொள்வதே அவர்கள் கடன். கடவுள் கட்டாயம் அவர்களது இத்தகைய விண்ணப்பத்திற்குச் செவி கொடுப்பார் என்று உறுதி கூறுகிறார்.

அறுப்புக்கு ஆயத்தமாயிருக்கும் உலக வயல்களின் அறுவடைக்கு, ஆட்கள் தேவையாயிருப்பதை, கிறிஸ்தவர்கள் உணர்வது அரிதாயிருக்கிறது வேலையாட்களைப் பெறுவது ஜெபத்தைப் பொருத்தது என்பதை அன்னவர் விசுவாசிப்பது அபூர்வம். அறுவடைக்கு ஆயத்மாயிருக்கும் நிலபுலங்களை அறுவடை செய்ய வேலையாட்களை அனுப்

பக்கடவுள் சித்தமாயிருக்கிறார் என்பதையும், அது அடியாரின் உண்மையானஜெபங்களால் அது ஆகக்கூடியது என்பதையும் பலர் உணராதிருக்கின்றனர். எனவே விளைந்த மகசூல் வேலையாட்களின்மையால் விரயமாகும் என்பதையும் யறியாதுளர். இதனையே மேய்ப்பனில்லாத ஆடுகள் என்று உவமித்தார் நம் ஆண்டவர். இன்னும் அவ்வாறே இருக்கிறது. 'பொல்லாநரர்க்குப் புகழ்வான் வழிகாட்டி எல்லாம் முடிந்தது இனி என்றே-சொல்லினுமற்-றின்னுங் குறைவாயிருப்பதைச் செய்வதுவே பன்னும் திருச்சபையின் பணி' அன்றோ! இதனையே பவுலடியாரும் 'இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அனுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்' என்றார் (கொலோ. 1:24) எனவே இத்தெய்வத்திருப்பணி கிறிஸ்து இயேசுவின் சரீரமாகிய திருச்சபையின் கரத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறதென்பதையும், அது திருச்சபையால் மட்டுமே நிறைவேற்றப்படமுடியும் என்பதையும் உணர்ந்து, மண்ணிலும் விண்ணிலும் அடியாரின் ஜெப வல்லமையால் சாதிக்க முடியுமென்பதையும் நாம் இன்னும் உணராதிருப்பது வருந்தத்தக்கதே.

என்ன மகோன்னதமான கருத்து இது! இதனை உணர்ந்தும்கூட நாம் ஏன் வேலையாட்களை அனுப்புமாறு இறைவனை வேண்டாதிருக்கிறோம்? இதற்குக் காரணங்கள் இரண்டு. தமதடியாரை ஜெபிக்கும்படி தூண்டிய இயேசு பிரானின் மனவுருக்கம் நம்மில் காணப்படாதது ஒன்று. விசுவாசிகள் தமதயலார்களில் அன்புகூரக் கற்பதும், தமது மனித சகோதரப் பிறவிகளுடன் கடவுளின் மகிமைக்காகவே முற்றும் வாழவேண்டும் என்பதைக் கற்பதுமே பரமபிதாவின் முதலாம் கற்பனை. இவ்வாறு செய்யும்போதுதான் மேய்ப்பனில்லாது அலைந்துதிரியும் ஆடுகள் துஷ்டமிருகங்களுக்கிரையாகாது காப்பது தமது தலைசிறந்த கடன் என்பதை ஒப்புக்கொள்வார். அதனை ஒப்புக்கொண்டபோதுதான் அடியார் வேலையாட்களை அனுப்புமாறு ஆண்டவனை வேண்டிக்கொள்ளும் அவசியம் உதிக்கும். விசுவாசக்குறைவு மற்றொரு காரணம். திட்டவட்டமான பலன்கள்கிடைக்கச் செய்யும் ஜெபத்தின் வல்லமையில் நம்பிக்கையற்றுப்போனோம். கடவுளோடு நெருங்கிப்பழகுவது மில்லை. அவருடைய திருப்திக்கும் கடவுட் பேரரசுக்கும் நம்மை முற்றும் ஒப்புக்கொடுக்கவுமில்லை. நமது ஜெபத்திற்குப்பதில் அருள்வார் என்று நம்புவதுமில்லை. கிறிஸ்துவிலிருந்த மனவுருக்கம் நமக்கும் வரவும், நமது ஜெபத்தால் பலன்பெற அவரது ஆவி வரவும் வேண்டுவோமாக.

அத்தகைய ஜெபம் இருவித ஆசிகளைக் கேட்டு அவற்றையடையும் முதலாவது கடவுட்டிருப்பணிக்கென்றே முற்றும் தம்மை ஒப்புக்

கொடுத்த மக்கட்பெருக்கம் அதிகரிக்கும். போதகர்களாகவும், உபதேசிகளாகவும் மிஷனரிகளாகவும் தக்க ஆட்களைத் திருச்சபையில் கண்டுபிடிப்பது சில சமயங்களில் அரிதாயிருக்கிறது. இது திருச்சபையில் காணப்படும் ஒரு கறை. பெருங்குறை. ஆண்டவர் அறுப்பின் எஜமான்-ஆவியை அருளும் அதிகாரம் பெற்றவர். அவரது பிரதான நன்கொடை ஆவியால் நிரப்பப்பட்ட ஆட்களே யாகும். ஆனால் நன்கொடைகளை யருள்வதும், பகிர்ந்து கொடுப்பதும் தலைவருக்கும் உறுப்பினருக்கும் உள்ள கூட்டுச் செயலாகும். அக்கூட்டுழைப்புக்கு ஜெபமே வழி நடத்தும்.

கேட்கவேண்டிய பிறிதொரு ஆசி யாதெனில் இதிலும் குறைந்ததன்று. தனியொரு விசுவாசியும் இறைவனின் திராட்சைத் தோட்டத்தில் எவரும் சோம்பலாயிராதபடி, சகலரும் அவரது-ஆவியால் நிரப்பப்படும்படி வேண்டுவதே நமது ஜெபமாயிருக்கவேண்டும். வேலையாட்களுக்காக ஜெபிக்கும்படி கற்பித்த நமது குருநாதர், அவரது நாமத்தில் அவர் பிரியப்படும் விஷயத்தைப்பற்றி நாம் ஜெபிக்கும்போது, அவர் அதனை ஆதரிப்பார் இப்பரிந்துபேசும் பணிக்கென்று பிரத்தியேகமான நேரங்களை ஒதுக்கி ஜெபித்து வருவோமாக.

அப்படிச் செய்யும்போது அவரது மனஉருக்கத்தோடு நாமும் ஐக்கியப்படுவோம். கடவுள் இராஜ்யத்தைப் பரப்பும் திருக்கூட்டத்துள் உறுப்பினர் என்ற நிலைக்கு நாம் உயர்த்தப்படுவோம். உலகில் நாம் கடவுளின் உடன் ஊழியர் என்பதை உணர்த்தப்படுவோம் இயேசுபிரானின் ஆன்ம சாந்திக்குப் பங்காளிகளாக்கும் கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை நமது மாமிசங்களில் நிறைவேற்றும் சிலாக்கியமும் அளிக்கப்படும்.

வருங்கால இந்திய சபை

(மகாகனம் ஏ. எம். ஹாலீஸ் அத்தியட்சர்)

மிஷனெரிமார் இந்தியாவில் கடந்த காலத்தில் செய்து வந்திருக்கும் சேவையை நன்கு மதித்து ஆரம்பத்தில் சில வார்த்தைகள் கூறுகின்றேன். நாம் ஒருவேளை அறியக்கூடாமலிருக்கும் பலவிதமான கஷ்டங்களை சகித்து நாம் தற்காலத்தில் சேர்ந்திருக்கும் திருச்சபையின் அஸ்திபாரத்தை அவர்கள் போட்டார்கள். ஒருவேளை அவர்களின் சேவையின் சில விஷயங்களை நாம் ஆட்சேபித்தாலும், அவர்களின் பக்திவினயமும், தியாகமும் மிகுந்த ஊழியத்தை நாம் நன்கு மதிக்கிறோம். அவர்களின் ஊழியத்தில் தவறுதலுண்டு தற்காலத்தில் நாமும் தவறுதல் செய்கிறோமல்லவா. இமாலய பர்வதத்தின் உச்சியில் சென்றவர்கள், கடந்த காலத்தில் அங்கு போக

முயற்சித்தவர்களின் தவறுதல்களை அறிந்ததினால்தான், எவறஸ்டு உச்சியில் போகக்கூடியதாயிருந்தது.

சபைதான் முதலாவதாக இருக்கவேண்டும். நமது எண்ணத்திலும் ஒழுங்குகளிலும் மத்தியமாகக் கருதவேண்டியது கிறிஸ்து சபை. கடந்தகால சரித்திரத்தை நாம் கவனிக்கும்போது, மிஷன் என்னும் வார்த்தையை மேன்மைப்படுத்தி, சபை என்னும் வார்த்தைக்கு அதிக மகிமை கொடுக்கவில்லை. சபையில் ஊழியம் செய்கிறவர்களுக்குக் குறைந்த சம்பளம். மிஷனில் உழைக்கிறவர்களுக்குக் கூடுதல் சம்பளம். காலேஜ், உயர்தர பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள் இவைகள் மிஷனெரிமார் கைவசம் இருந்தன. அவைகளில் வேலை செய்கிறவர்களுக்கு கூடுதல் சம்பளம், கூடுதல் அனுகூலங்கள்; சபையில் உழைக்கும் ஊழியருக்கோ சம்பளம் குறைவு, பலவித கஷ்டங்கள். ஒருவேளை தற்காலத்தில் மிஷன் ஊழியம், சபை ஊழியம் என்னும் வித்தியாசம் சற்று குறைந்தாலும், இன்னும் பல இடங்களில் இவ்வித வித்தியாசம் அதிகமாய் காணப்படுகிறது. மேலும், கிறிஸ்தவ சமுதாயத்தை பெலப்படுத்தவே கிருஸ்தவ மிஷன்கள் இருக்கின்றன என்னும் அபிப்பிராயமும் காணப்படுகிறது. புற மதஸ்தருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டுமென்றல்ல, இப்போது இருக்கும் கிறிஸ்தவர்களை உலக பிரகாரமாக உயர்த்துவதே மிஷன்களுடைய ஊழியம் என்று பலரும் தப்பாக எண்ணுகிறார்கள் நான் கிறிஸ்தவனானதினால் எனக்கும், என் குடும்பதுக்கும் மிஷனிலிருந்து என்ன கிடைக்கும் என்பதையே பலரும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் சபை என்பது நமது மனதில் தெளிவாகவும், மகா முக்கியமாகவும் இருந்தால், நான் திருச்சபைக்காக என்னத்தை செய்யலாம் என்னும் எண்ணம் உண்டாகும்.

சபை என்றால் என்ன? சபை என்பதின் கருத்தை நாம் அதிகமாக அறியவேண்டும். பரிசுத்த ஆவியாகிய கடவுளின் பிரசன்னத்தில் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் அற்புதமான ஒரு கூட்டுறவு. திரு அவதாரம் எடுத்த கடவுளின் குமாரன், கடவுளின் பிள்ளைகள் என்று அழைக்கும் சுதந்தரமுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். கடவுளால் மீட்கப்பட்ட ஜனம். உலகத்தினின்று பிரிக்கப்பட்ட பரிசுத்தக்கூட்டம். அவர்கள் புது சிருஷ்டிகள். தங்களுடைய கிரியையாலல்ல, கடவுளின் கிரியையால் பரிபாலிக்கப்பட்டவர்கள பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு, பரிசுத்தஆவியானவரால் நடத்தப்படும் இந்த திருச்சபையைச் சேர்ந்தவர்கள், கடவுளால் பலவித ஊழியத்தில் உபயோகிக்கப்பட்டு வருகிறார்கள். நாம் காணும் திருச்சபை மிகவும் முக்கியமே. ஆனால் பரிசுத்த ஆவியானவர், அதற்கு மேலாகவும் கிரியை செய்கிறார். நாம் எல்லாரும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு அவரால் உபயோகிக்கப்படவும் வேண்டும் பிரபலமான உல்லியம் கேரி பண்டிதரின் மேற்கோள் நம்முடையதாக இருக்கவேண்டும்.

'கடவுளிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்.
கடவுளுக்காக பெரிய காரியங்களைச் செய்.'

புதிய ஏற்பாட்டின்படி, கிறிஸ்தவ ஜீவியம் பரிசுத்த ஆவியைப் பெறுதலால் ஆரம்பிக்கிறது பரிசுத்த ஆவியின் கிரியை விசுவாசத்தின் மூலம் நடைபெறுகிறது.

இந்திய சபையின் நிலைமை. தற்காலம் இந்திய சபையின் நிலைமையைக்குறித்து நாம் அதிகமாய்ச் சிந்திக்கவேண்டியது. தென் இந்திய சபையின் சில அத்தியட்சாதீனங்களின் சபைகள் கவர்ன்மென்று உபாத்திமார் உபதேசிகளாக நடத்தி வருகிறார்கள். இவ்விதமாய் கவர்ன்மென்று கிரண்டு பெற்றுவரும் உபாத்திமார் உபதேசிமாராக இருக்கக்கூடாது என்று சட்டம் வந்தால் சபைகளை நடத்தத் தனி உபதேசிமார் கிடைப்பது கஷ்டம் லண்டன் மிஷனிலிருந்து வரும் கிரண்டு 40 சதவீதம் நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆதலால் நமது சபை ஆளுகையைப்பற்றி நாம் மறுபடியும் சிந்திக்கவேண்டியது மிகவும் அவசியம்.

(—தேசோபகாரி)

ஜூலை மாத—கி.மு. சங்கப் பொருள்—1954.

தலைமை தாங்கி நடத்துதல் ஓர் உக்கிராணம்—வாழ்க்கை ஓர் உக்கிராணம்

ஜூலை 1. விவேகமும், உண்மையுமுள்ள உக்கிராணக்காரன்— லூக். 12 : 41-48

2. மேன்மையான உத்தரவாதத்தைப் பாதுகாத்தல் I தீமோத். 6 : 20

3. உக்கிராணக்காரராக பணிசெய்தல் —I பேதுரு 4 : 10

4. கணக்கு ஒப்புவிக்க கடமைப்பட்டிருக்கிறோம் மத் 18:23

வல்லமையை உபயோகிக்க இயேசு தன்னை ஆயத்தப்படுத்தல்

5. சாத்தான் முக்கிய காரணம் ஆதி 3 : 1. I நாளா. 21:1 மத் 4:2

6. சோதிக்கப்படுகிறவர்களுக்கு உற்சாகம் I கொரி 10:13.எபி2:18

7. சோதிக்கப்படுகிறவன் பாக்கியவான் யாக் 1:13

8. நமது ஆண்டவரின் மூன்றுசோதனைகள் மத்-4:1-10

9. ஆண்டவரே சோதனையின்றுரட்சியும் II பேதுரு 2 : 9

10. சேர்க்கப்படுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் லூக். 12 : 19

11. இயேசுவின் பரிந்து பேசுதலினால் காக்கப்படல் லூக் 22:31

உக்கிராணத்தில் புதிய ஒழுங்கு—பாடனுபவித்தல்

12. ஏசாயா 53

13. ,, 53

14. ,, 53

15. ,, 53

16. மத் 20:20-28

17. யாக்கோபு யோவானுடைய தாயாரின் விண்ணப்பம் ,, ,, ,,

18. ,, ,, ,, ,,

உக்கிராணத்தை இழந்துபோன தலைவன்—அப் 1:15-20

19. பேராசை — மத். 26 : 14-15
20. மாய்மாலம் — யோவான் 12 : 5-6
21. சதி மோசம் — மாற்கு 22 : 47-48
22. உண்மையின்மை — யோவான் 12:6
23. வியாகுலப்படுதல் — மத். 27 : 3-4
24. அவனுடைய முடிவு — அப் 1 : 8
25. தலைமையை இழந்த தலைவன் — " " "

யூதரின் ஆட்சித் தலைவர்கள்

26.
27
28. பரிசேயர் வேதபாரகரைக் கண்டித்தல் — மத். 23 : 1-9
29.
30.
31.

ஆகஸ்டு மாத—கி. மு. சங்கப் பொருள். 1954.

டாமியன் சாமியார்—மற்றவர்களுக்காக தன்னையே தியாகம் செய்தல்

ஆகஸ்டு. 1. பரிசேயர், வேதபாரகருக்கு எச்சரிப்பு — மத் 23: 1-9
2. இயேசு குஷ்டரோகியை சுகமாக்குதல் — மாற்கு 1: 40-45
3. இயேசுவாகிய நல்லமேய்ப்பன் — யோவான் 10:1-11
4. பதவிக்குச் சண்டை — மாற் 10:35-45
5. கடவுள் அன்பாய் இருக்கிறார் — 1யோவன் 1·7-16
6 சிறைச் சாலைக்காரன் ரட்சிக்கப்படுதல் — அப் 16: 27-34
7. கிறிஸ்துவின் பிராயசித்தம் — ஏசாயா 53 : 1-6
8. ஜீவனை கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. — யோவான் 15 : 12-15

அசிசி பட்டணத்து பிரான்சிஸ்

9. அவன் அதிக ஆஸ்திக்காரன் — மத் 19: 16-24
10. மனிதரால் கூடாதது தேவனால் கூடும் — மத் 19: 25: 26
11. ஏழ்மைத்தனம் — மத் 10: 7-11
12. கற்பு — தீத்து 1:15
13. கீழ்ப்படிதல் — அப் 26: 19
14. உலகத்தை வெறுக்காமல் அதை ஜெயித்தல் — ரோமர் 8 : 37
15. சேவைக்கு மாதிரி-அசிசிபட்டணத்து பிரான்சிஸ் — மத். 10 : 34-35

நாராயண வாமன்திலக்

16. பிராமணனாகப் பிறந்தார். பிலி 3: 4-7
17. சரியான மனிதன் 1கொரி7:7
18. நல்ல அபிமானி I யோவன் 4: 20
19. நல்ல புலவர் சங் 96
20. நல்ல கிறிஸ்தவர் கொலோ 3: 3
21. நல்ல சன்னியாசி பிலிப் 1: 21
22. சேவைக்கு மாதிரி-நாராயணவாமன் திலக் I கொரி 1:23-25

பண்டித ராமபாய்—இந்தியாவின் பெண்களுக்காக

23. தேவனுடைய ராஜ்ஜியம் சமீபமாய் இருக்கிறது—
மத் 4:12-17
24 உண்மையான ஒளி — யோவன் 1:1-17
25. ஆவியானவர் வழிநடத்தி-வல்லமை கொடுக்கிறார்—ரோமர்
8: 12 17
26. கனி கொடுக்கும் ஜீவியம் —யோவான் 1·: 1-9
27. பாக்கிய வசனங்கள் —மத் 5: 1 12
28. அன்பே பிரதானம் —Iகொ 13: 1-13
29. பிறவிக் குருடன் பார்வை அடைதல் — யோவான் 9

சமுதாயத்தைப்பற்றி வேதபோதனை.

30. பொருள் அடமானம் விற்பனையைப்பற்றிய மோசேயின் பிர
மாணம் லேவி 25,26
31. ஆமோஸ் தீர்க்கதரிசி. ஒடுக்குதலைக் கண்டித்தல்
ஆமோஸ் 8 6

எட்டாம் சங்கீதம் (மகிமைத் துதியுடன்)

மோகனம் (‘ஏசுவைப்போல நட’ என்பதுபோன்று) ஆதிதாளம்

1—2 எத்தனை சிறந்தது இந்த உலகம் எங்கும்
இறைவா, உன் திருநாமம்!
வைத்தாய் உன் மகிமையை வானங்களுக்கு மேலாய்
வன்பழிகாரர் ஓட, மழலைகள்போல் நான்பாட—எத்

3—4 வானம் உன்தன் கைவேலை, மற்றும் நிலா வெள்ளிகள்
மகிமையைச் சிந்திக்கையிலே,
ஏனோ மனிதனை நீ எண்ணி நினைப்பதுகாண்!
எம்மாத்திரம் அவன் உன் கண்ணோக்(கு) ஆள்காண்! என்பேன்
—எத்

5—6 தேவதூதனில் சற்றுச் சிறியவனாய் அவற்குச
சீர்முடி சூட்டிவைத்து,
காவல் புரிவதற்(கு) உன் கைவேலை யாவும்
கால்களின் கீழ் அடக்கிக் கனமகிமை அளித்தாய்—எத்

7—8 ஆடுமாடுகள் என்ன, ஆகாயப்பட்சிஎன்ன
ஆழ்கடல் உயிர்கள் என்ன!
காடு திரிந்து தங்கும் கனவிலங்குகள் அவன்
கால்களின் கீழ் அடக்கிக் கனமகிமை அளித்தாய்—எத்

9 ஆதித்தந்தை குமாரன் ஆவியாம் தூயவனுக்(கு)
அளவிலா மகிமை ஓங்க!
ஓதி உணரவொண்ணா ஊழி ஊழிகள் முதல்
உள்ளபடியே இன்றும் என்றும் உயர்ந்திடுக!—எத்

ஜோதிமுத்து பண்டிதர்,
அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

Lenox Press, Pasumalai, 12—7—1954. 426 C.

விளம்பரம்

நமது அத்தியட்சாதீனத்துப் பள்ளி மாணவிகள் முகாம்

கீழ்க்கண்ட முகாம்கள் நடத்த ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது :—

I உயர்தரப்பள்ளி மாணவிகள் முகாம்

யாருக்கு ? உயர்தரப்பள்ளி மாணவிகளுக்கு

எங்கே ? கடல் அலை குமுறும் குலசேகரப்பட்டணம்

எப்பொழுது ? அக்டோபர் 22ம் தேதி முதல் 26ம் தேதி வரை

II மத்தியதரப்பள்ளி மாணவிகள் முகாம்

யாருக்கு ? மத்தியதரப்பள்ளி மாணவிகளுக்கும், ஆரம்ப உயர் தரப்பள்ளி மாணவிகளுக்கும்

வயது ? 12 முதல் 14 முடிய

எங்கே ? பள்ளிப்பிள்ளை பாசமூறும் பாம்பன்

எப்பொழுது ? செப்டம்பர் 11ம் தேதி முதல் 14ம் தேதி வரை

மாணவிகளே ! இவ்வரிய சந்தர்ப்பத்தை விட்டு விடாதீர்கள் ! வந்து களித்து, பயன் பெற்றுப் போங்கள் !

மேற்படி முகாம்களைப்பற்றிய வேறு தகவல்கள் பின்னால் அறிவிக்கப் படும்.

Miss I. Bosanquet,
,, N. Daniel,
,, R. Alagumani.

விளம்பரம்

நம்முடைய அத்தியக்ஷாதீன டிப்போவில் தற்சமயம் ஆராதனைக்கு வேண்டிய (Grape Juice) திராட்ச ரசமும் (Wafers) அப்பமும் ஏராளமாய் குருமாருக்கு வசதியாக தருவித்து வைக்கப்பட்டிருக்கின்றன. இது எல்லா குருமார் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இது தவிர நோட்டு புஸ்தகங்கள், புஸ்தகங்களோடுகூட பாடசாலைகளுக்குவேண்டிய கடுதாசிகள், பென்சில்கள், பவுண்டன் பேனா, இங்வாட்டர் கலர்கள் முதலியன ஏராளமாய் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. அத்தியக்ஷாதீன எல்லா யூனிட்டுகளும் தயவுசெய்து தங்களுக்கு வேண்டிய சாமான்களை டிப்போமூலம் ஆர்டர் செய்து வாங்கிக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அப்பா ஸ்ரீநிவாஸன்,
மானேஜர்.

விளம்பரம்

கிராம ஊழியரின் தலைமைக் காரியாலயம் எப்ரல் 15ம் தேதியிலி ருந்து பசுமலைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. இனிமேல் பசுமலை விலாசத் திற்கு கடிதம் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

சேல்லப்பா,
அத்தியக்ஷாதீனக் கிராம ஊழியர்.

அறிக்கை

அத்தியட்சாதீன தேவ ஊழியரின்
வருடாந்திரப் பரீட்சை
ஆகஸ்டு 4, 1954.

வழக்கம்போல் இந்தப் பரீட்சை இந்த வருடம் வருகிற ஆகஸ்டு மாதம் முதல் புதன்கிழமை 4-ம்வ காலையும் மாலையும் நடைபெறும்.

ஆகஸ்டு 4, காலை—எரேமியா தீர்க்கதரிசனம்.

" மாலை—ரோமர் நிருபம் ($1\frac{1}{2}$ மணி)

பரிசுத்த ஆவியின் அந்நியோந்நியம் ($1\frac{1}{2}$ மணி)

தேவ ஊழியர் அனைவரும் இப்பரீட்சைக்கு ஆயத்தமாயிருக்கும் படி அன்புடன் கேட்கிறோம்.

வேதபாடசாலை,
பசுமலை.